2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 4

## பயிற்சி 6

பெயர் ____________________________________________

*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**



**அம்மி, ஆட்டுக்கல், உரல்**



- தாயகத்தில் எல்லா வீடுகளிலும் அம்மி, ஆட்டுக்கல், உரல் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- அம்மியில் துவையல் (சம்பல்) அரைப்பர்.
- அரிசி, உழுந்து போன்றவற்றை ஊறவைத்து ஆட்டுக்கல்லில் அரைப்பர்.
- அரைத்த அரிசி, உழுந்தில் தோசை சுடுவர். இட்டலி அவிப்பர்.
- அரைத்த உழுந்தில் வடை சுடுவர்.
- உரலில் அரிசி இட்டு உலக்கையால் இடிப்பர்.
- அரிசி மாவில் இடியப்பம், பிட்டு அவிப்பர்.
- திரிகையில் பயறு, உழுந்து போன்றவற்றைத் திரிப்பர்.
- அம்மி, ஆட்டுக்கல், திரிகை போன்றன கருங்கல்லினால் செய்யப்படுகின்றன.
- உரல் கருங்கல்லினாலும் மரத்தாலும் செய்யப்படுகின்றது.





2. **வாசித்தல்**

மிகப் பழங்காலந் தொட்டே தமிழ் மக்களிடையே வழக்கில் இருந்து வந்த இசைக் கருவிகளில் யாழ் முதன்மை பெற்றது. இது நரம்புக் கருவி வகையைச் சேர்ந்தது. வில்லில் நாணை ஏற்றி அம்பு எய்த போது இசையொலி எழுந்தது. அதனைக் கொண்டு வில்லின் வடிவில் யாழைப் படைத்தனர். பண்டைய யாழ் பிற்காலத்தில் சிறிது உருமாறி வீணையாயிற்று. யாழிசை தமிழ் மக்களிடையே பெரிதும் மதிப்பைப் பெற்றது. யாழ் இசைப்போரைத் தமிழர் 'பாணர்' என்று அழைத்தனர். இன்று இசை நிகழ்வுகளின் போது வயலினும் வீணையும் வகிக்கும் இடத்தை அன்று யாழ் வகித்தது. விபுலாநந்தரால் எழுதப்பட்ட 'யாழ்நூல்' என்ற நூலில் யாழைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

.

3. **பின்வரும் சொற்களைத் தமிழில் எழுதுவோம்.**

- You ______________________________
- But ______________________________
- That ______________________________
- How ______________________________
- When ______________________________
- Why ______________________________
- Cleaning ______________________________
- Giraffe ______________________________
- Dress ______________________________
- Bus ______________________________
- Grapes ______________________________
- Jackfruit ______________________________
- Bus stop ______________________________
- Door ______________________________
- Computer ______________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

**4. பின்வரும் எழுத்துகளில் தொடங்கும் இரண்டு சொற்களை எழுதுக.**

எ.கா.

- **அ** - <u>அதிகாலை</u> <u>அகத்தியம்</u>
- **இ** - ____________________ ____________________
- **உ** - ____________________ ____________________
- **ஏ** - ____________________ ____________________
- **வி** - ____________________ ____________________
- **ம** - ____________________ ____________________
- **பெ** - ____________________ ____________________
- **த** - ____________________ ____________________
- **வெ** - ____________________ ____________________
- **ப** - ____________________ ____________________
- **சி** - ____________________ ____________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

5. **பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

➢ தமிழருடைய கொண்டாட்டங்களிலே சிறந்தவை எவை?

______________________________________________

______________________________________________

➢ இலக்கண நூல்களில் முதன்மையானது எது?

______________________________________________

______________________________________________

➢ திராவிட மொழிகளின் மூலமொழி எது?

______________________________________________

______________________________________________

➢ ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு எது?

______________________________________________

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

6. **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

- இரவெல்லாம் பூங்காடு; பகலெல்லாம் வெறுங்காடு. அது என்ன?
  (மலை, வானம், தோட்டம்)

- தோற்கருவிகளில் ஒன்று ________________.
  (யாழ், புல்லாங்குழல், பறை)

- பனிகாலத்தில் வீட்டில் வெப்பம் தர உதவுவது ________________.
  (சூடாக்கி, குளிரூட்டி, குளிர்பதனப்பெட்டி)

- மயில்கள் பார்க்க ________________ இருக்கும்.
  (அலகாக, அழகாக, அளகாக)

- நாங்கள் கோடைகால விடுமுறையை ____________________க் கழிப்போம்.
  (இகழ்ச்சியாக, புகழ்ச்சியாக, மகிழ்ச்சியாக)

- இலைதளிர் காலத்திற்கு முன்வரும் காலம் ________________.
  (கோடைகாலம், பனிகாலம், இலையுதிர் காலம் )

- வைகறை என்ற சொல் குறித்துநிற்பது ________________.
  (மாலை, இரவு, அதிகாலை)

- கடமையைச் செய்யத் ________________ .
  (தவறாதே, நினைக்காதே, சொல்லாதே)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

**7. படத்தைப் பார்த்து 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதவும்.**



முயலும் ஆமையும்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர்தமிழ் 4